DEPOSITION OF WITNESS

Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, VANUR.

Calender - C.C.No. 39 /2021
Miscellaneous -

Sessions -

Deposition of witness for Prosecution PW 1
Defence

Name : Ravichandiran

Father Name /
Husband Name :

Village :

Taluk :

Caste : -

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 the day of 24th September 2025

எதிரிக்கு மனுதாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.

குறுக்கு விசாரணை

எதிரி எனக்கு வாடிக்கையாளர் என்ற வகையில் அவரை எனக்கு தெரியும். எதிரி 11.03.2020 அன்ற அவரது அவசர தேவைக்காக என்னிடம் பணம் கேட்டார். எந்த நேரத்தில் எதரி என்னிடம் வந்து பணம் கேட்டார் என்றால் காலை 10.00யிலிருந்து மாலை 04.00 மணிக்கு கேட்டிருப்பார். நேரம் குறிப்பாக நினைவில்லை.

எதிரி என்னிடம் ரூ.50,000/- கேட்டார். ரூ.50,000 கொடுத்தேன். மேற்படி ரூ.50,000ஐ ரொக்கமாக கொடுக்கவில்லை. எங்கள் நிறுவனத்தில் பொதுவாக வங்கி கணக்கு பரிவர்த்தனை மட்டுமே செய்வோம். அன்றைய தினமே மேற்படி பணத்தை வங்கி பரிவர்த்தனை(சூநுகுகூ)

மூலம் கொடுத்தோம். மேற்படி பணத்தை எதிரிக்கு கடனாக ஆண்டுக்கு 1 சதவீதம் வட்டிக்கு கொடுத்தோம்.

20.10.2020 அன்று எதிரி எனக்கு வழக்கு காசோலையை கொடுத்தார். நான் கடன் கொடுத்ததற்கும் காசோலை அவர் கொடுத்ததற்கும் 7 மாதங்கள் வித்தியாசம் உள்ளது. எதிரி அசல் தொகையான ரூ.50,000/-க்கு வழக்கு காசோலை கொடுத்தார். வட்டியுடன் சேர்த்து தொகைக்கு காசோலையை நான் ஏன் பெறவில்லை என்றால் அசல் தொகைக்கு மட்டும காசோலையை கொடுத்ததாகவும் வட்டி தொகையை இரண்டு மாதங்களில் கொடுத்துவிடுவதாக எதிா என்னிடம் சொன்னார். மேற்படி கடன் தொகைக்கு எதிரி மாதம பணம் கொடுக்க வேண்டும்.

தற்போது வரை எதிரி எத்தனை தவணை செலுத்தியுள்ளார் என்றால் ஒரு தவணையும் கொடுக்கவில்லை. எதிரி எனக்கு பிராமசரி நோட் கொடுத்ததாக எனது வழக்கில் குறிப்பிட்டுள்ளேன் என்றாலும் அதை ஆவணமாக வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. இவ்வழக்கு காசோலை மோசடி வழக்கு என்பதால் காசோலையை மட்டும் ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன்.

எதிரி எனக்கு காசோலை எதுவும் கொடுக்கவில்லை என்றாலும் என்னிடம் கடன் எதுவும் பெறவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/-XXXX
நீதித்துறை நடுவர்,
வானூர்.